இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 20-05-2025

# மாநிலப் பட்டியலில் கல்வி!

**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய, 'தேசியக் கல்விக் கொள்கை - 2020 எனும் மதயானை' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்களும் மிகமிக முக்கியமான கோரிக்கை ஒன்றை வைத்துள்ளார்கள். 'கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுங்கள்' என்பதுதான் அந்தக் கோரிக்கை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரதமர் மோடி அவர்கள் முன்னிலையில் பேசும் போது முதலமைச்சர் அவர்கள் இதே கருத்தை வலியுறுத்தினார்கள்.**

அரசமைப்புச் சட்டம் எழுதப்பட்டபோது கல்வியானது, மாநிலப்பட்டியலில்தான் இருந்தது. 1975 ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்ட போது கல்வியானது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. 42 ஆவது சட்டத்திருத்தம் மூலமாக இது செய்யப்பட்டது. 1976 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 246, ஏழாவது அட்டவணையில் பட்டியல் இரண்டில் இருந்தது. கல்வி குறித்து அனைத்து முடிவுகளை எடுக்கும் அதிகாரமும் மாநில அரசுகளின் கையில் இருந்தது. இப்போது கல்வி, பொதுப்பட்டியல் வரிசை 25 இல் இருக்கிறது.

**"நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது, கல்வியை மாநில பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றி நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசன திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும்"** என்று கோரி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் அவர்கள் 'அறம் செய்ய விரும்பு' அமைப்பின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கைத் தாக்கல் செய்தார். நீதிபதிகள் மகாதேவன், சுந்தர் மற்றும் செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய முழு அமர்வில் இந்த வழக்கு விசாரணை நடத்தியது. இன்னமும் அந்த வழக்கு விசாரணையில்தான் இருக்கிறது.

மாநிலக் கல்விக் கொள்கையை வகுக்க நீதிபதி டி.முருகேசன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இக்குழு தனது அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அக்குழு தனது முதல் பரிந்துரையாக, 'கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்' என்று கூறி இருக்கிறது.

இன்றைய பா.ஜ.க. அரசானது, கல்வித் துறை முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் பட்டியலில் இருப்பதைப் போலவே செயல்பட்டு வருகிறது.

**ஒன்றிய அரசின் பட்டியலில் கல்வி இருப்பதைப் போலச் செயல்படும் அவர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்கிறார்களா என்றால் அது இல்லை. தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறைக்கு இந்த ஆண்டு ரூ.40 ஆயிரம் கோடி செலவு செய்கிறது. ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் செலவு செய்யும் தொகை ரூ.70 ஆயிரம் கோடி தான். நிதி ஒதுக்கீடு செய்யாமலேயே கல்வித் துறையை ஆக்கிரமித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

2022 ஆம் ஆண்டு ஒன்றிய கல்வி அமைச்சகத்தால் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. 'கல்விக்கான நிதி நிலை செலவின பகுப்பாய்வு' என்று இதற்குப் பெயர். இந்தியாவில் கல்வித் துறைகளின் மொத்த வருவாய் செலவு ரூ.6.25 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டது. இதில் ஒன்றிய அரசால் செலவு செய்யப்படும் தொகை 15 விழுக்காடு மட்டுமே. 85 விழுக்காடு தொகையை மாநில அரசுகளே செலவு செய்கின்றன என்று அந்த அறிக்கை சொல்கிறது. 85 விழுக்காடு தொகையை செலவு செய்யும் மாநில அரசுகளால், கல்விக் கொள்கையை தீர்மானிக்க முடியாது என்பது அவமானம் அல்லவா?

**அனைத்துச் செலவுகளையும் செய்வது மாநில அரசு. ஆனால் பாடத்திட்டத்தை மட்டும் அவர்களது பாடத் திட்டமாக வைத்திருக்க வேண்டுமாம். மருத்துவக் கல்லூரியை கோடிக்கணக்கில் செலவு செய்து நடத்துவது மாநில அரசு. ஆனால் மாணவர் சேர்க்கையை 'நீட்' தேர்வு மூலமாக நடத்துவது ஒன்றிய அரசு. இதைப் போல எதேச்சதிகாரப் புத்தி இருக்க முடியுமா?**

அனைவருக்கும் கட்டாயக் கல்வி, அனைவருக்கும் அடிப்படைக் கல்வி, அனைவருக்கும் குறைந்த பட்சக் கல்வித் தகுதி - இதுதான் பள்ளிக் கல்வியின் அடிப்படை ஆகும். பள்ளிக் கல்வியின் இந்த முகத்தை, அடிப்படையைச் சிதைக்கவே, 'தேசியக் கல்விக் கொள்கை' கொண்டு வரப்படுகிறது. தேசியக் கல்விக் கொள்கை, நீட் தேர்வு ஆகியவைதான், 'மாநிலப் பட்டியலில் கல்வி' என்ற முழக்கத்துக்கு முக்கிய அடிப்படையாக உள்ளது.

ஒன்றிய அரசாங்கம் 'ஒரே மாதிரி பாடத்திட்டத்தில்' தான் கவனம் செலுத்துகிறது. இங்கே தேவையானது, தனித்தனி கவனிப்புகளும், அக்கறைகளும் தேவை. ஒரு பி.எம்.ஸ்ரீ. பள்ளியை கட்டுவது முக்கியமல்ல. அதில் படிக்கும் பிள்ளைகளுக்கு எந்த அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படப் போகிறது என்பதுதான் முக்கியம். உயர் தரமான கட்டடத்தை விட, கற்பிப்பு அக்கறையே அவசியம்.

**பள்ளிப் படிப்பை முடித்து உயர் கல்வி செல்பவர்களின் எண்ணிக்கை தேசிய அளவில் 27.1 சதவிகிதமாக உள்ளது. ஆனால் தமிழகத்தில் உயர் கல்விக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 51.4 சதவிகிதம் ஆகும். அதாவது இந்திய சராசரியை விட தமிழகத்தின் சராசரி இரண்டு மடங்கு ஆகும். தேசிய தரவரிசைப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த 14 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன. முதல் 100 இடங்களுக்குள் தமிழகத்தைச் சேர்ந்த 33 கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன. இதே போன்ற உயர்நிலையில் பல மாநிலங்கள் இல்லை. எனவே, அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற கவனிப்புகள் தான் தேவை.**

கல்வி அறிவில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக கேரளா இருக்கிறது. 96.2 விழுக்காடு பெற்றுள்ளது கேரளா. மிகக் குறைவான கல்வி அறிவு கொண்ட மாநிலமாக பீகார் இருக்கிறது. இது 61.8 விழுக்காடு மட்டுமே. இரண்டு மாநிலக் கல்வியையும் ஒரே மாதிரியாக நடத்த முடியுமா?

**'நெருக்கடி நிலை காலம் இந்தியாவின் இருண்ட காலம்' என்று சொல்கிறார் பிரதமர் மோடி. இருண்ட காலத்தில் எடுக்கப்பட்ட முடிவை எதற்காக அவர் பின்பற்ற வேண்டும். 'இருண்ட காலம்' என்பது அரசியலுக்காக சொல்லப்படும் கருத்தல்ல என்று மெய்ப்பிக்கும் வகையில், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற பிரதமர் மோடி முடிவெடுக்க வேண்டும்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.5.2025) சென்னையில் நடைபெற்ற, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் டி.உமாசங்கர் – வெண்ணிலா ஆகியோரின் மகன் நவினேஷ் – நந்திதா கிருஷ்ணன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்! கொளத்தூர் தொகுதியில்

# கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி!

## பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு – பல்லாயிரவர் கண்டுகளித்தார்கள்!

**சென்னை, மே 20 -**

**கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை கொளத்தூர் தொகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான கழக அரசு 4 ஆண்டுகளை நிறைவு செய்து 5ம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. கழக அரசின் 4 ஆண்டு சாதனைகளை பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும், பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாகவும் பொதுமக்களிடம் எடுத்து சொல்ல வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார்.

அந்த வகையில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் 'நாடு போற்றும் 4 ஆண்டு' என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சி கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம். காலனியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கண்காட்சியை கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 16ஆம் தேதி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

கழக அரசு கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்திய திட்டங்கள் குறித்த புகைப்படங்கள் கண்காட்சியை அலங்கரித்தன. இந்த கண்காட்சியில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும் வீடியோ பதிவும் இடம் பெற்றது.

அதில்,

'எனது தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்வி கூடங்களில் காலை உணவுத் திட்டத்தால் குழந்தைகளின் அறிவு உலகை விரிவு செய்துள்ளது. ஆலயங்களில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கி, அன்னை தமிழில் வழிபாடு நடத்தி ஆன்மிக புரட்சி கண்ட அரசு, 2,500க்கும் மேற்பட்ட கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தி ஆன்மிக பண்பாட்டை பாதுகாக்கும் அரசு, புதுமை பெண் திட்டம், தவப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்களால் மாணவர்கள் வாழ்வில் வரலாற்று மாற்றங்களை செயல்படுத்திய அரசு.

பெண்கள் சொந்தக் காலில் நிற்க சுழல் நிதி, சிறு-குறு தொழில் முனைவோர்களுக்கு முன்னேற்ற நலன்கள், கடன்கள். இவ்வாறு அபார வளர்ச்சியை, அதிசயத்தக்க வகையில் புதுமைகளைப் படைத்து மக்கள் பாராட்டை பெற்ற ஒரே அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. பெரியார், அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது கனவுகளை நிறைவேற்றும் திராவிட மாடல் அரசின் எண்ணற்ற சாதனைகளில் ஒரு சில சாதனைகளை மட்டும் தற்போது முன் வைத்தேன். மீண்டும் அமைய உள்ள நமது ஆட்சியில் புதிய, புதிய திட்டங்களோடும், அரிய, பெரிய செயல்களோடும் உங்களுடைய ஆதரவோடு தொடர்வேன். உங்களில் ஒருவனாக இருப்பேன். உங்களுக்காகவே உழைப்பேன். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்."

- என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குரல் பதிவு இடம் பெற்றது. 3 டி திரையில் சாதனை விளக்க பாடலும் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்த விழாவில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, எம்.பி.க்கள் தயாநிதிமாறன், இரா.கிரிராஜன், மேயர் பிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபுவின் முன்னெடுப்பிலும் முழு முயற்சியிலும் மிகுந்த பொருட்செலவில் பிரம்மாண்டமான முறையில் கருத்துக்கும் கண்களுக்கும் விருந்தளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியை, நாளொன்றுக்கு, பல்வேறு அமர்வுகளிலும் - 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டுகளித்தார்கள்.

இவ்வாறு கடந்த 3 நாட்களில் மட்டும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கழக அரசின் இந்தச் சாதனை விளக்கக் கண்காட்சியைக் கண்டுகளித்தார்கள்.

**அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார்!**

**அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை பாராட்டினார்!**

இக்கண்காட்சியினை, நேற்று முன்தினம் (18.5.2025) மாலை, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும் - பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சருமான எ.வ.வேலு பார்வையிட்டார்.

கண்காட்சி வடிவமைக்கப்பட்டிருந்த விதம், கண்காட்சியில் இடம்பெற்ற புகைப்படங்கள், கழக அரசின் சாதனை விளக்கங்கள், 3டி ஒலி - ஒளிக் காட்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்களையும் இக்கண்காட்சி எழிலுற அமை க்கப்பட பெரிதும் பாடுபட்ட அமைச்சர் பி.கே.சேகர்பாபுவையும் பெரிதும் பாராட்டினார்.

### வல்லம் ஒன்றியம் – கொங்கரப்பட்டு கிராமத்திலிருந்து மணியம்பட்டு கிராமத்துக்கு செல்வதற்கு

# சங்கராபரணி ஆற்றில் ரூ. 9.10 கோடியில் புதிய உயர்மட்ட மேம்பாலம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

செஞ்சி, மே 20 –

வல்லம் ஒன்றியம் கொங்கரப்பட்டு கிராமத்திலிருந்து மணியம்பட்டு கிராமத்துக்கு செல்வதற்கு சங்கராபரணி ஆற்றில் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி வல்லம் ஒன்றியம் கொங்கரப்பட்டு கிராமத்திலிருந்து மணியம்பட்டு கிராமத்திற்கு சங்கராபரணி ஆற்றைக் கடந்து அப்பகுதி பொதுமக்கள் சென்று கொண்டிருந்தனர்.

மழைக்காலங் களில் சங்கராபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் இக்கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனால் சங்கராபரணி ஆற்றில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் பணி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார். மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் காசிம்மாள் முனுசாமி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர், செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, அன்புராஜ், முருகானந்தம், ராமதாஸ், சசிகலா மோகனசுந்தரம், பிரேம் சாந்தி, முருகன், லட்சுமி லட்சுமணன், சரண்யா நாகசாமி, ஏழுமலை, பழனி, கலை சிவசங்கரன், கதிரவன், மண்ணாங்கட்டி, முருகேசன், பாண்டிய ராஜன், ரவிச்சந்திரன், பன்னீர்செல்வம், ஜானகிராமன், மனோகரன், சுப்பிரமணி, குணசேகரன், பிரகாஷ், சரவணன், முத்து, கிருஷ்ணன், நாராயணன், மணிமாறன், நித்தியானந்தன், சங்கர், மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

